بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلی علی رسولہ الکریم　　وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்
வார இதழ் - காதியான்
Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 6
வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 8
ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது
துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

12 ரஜப் 1442 ஹிஜ்ரி கமரி 25 தப்லீக் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 25 பிப்ரவரி 2021


## அல்லாஹ்வின் கட்டளை

وَالَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَرُسُلِهٖ
وَلَمْ يُفَرِّقُوْا بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ
اُولٰٓئِكَ سَوْفَ يُؤْتِيْهِمْ اُجُوْرَهُمْ

அல்லாஹ்விடத்தும், அவனுடைய தூதர்களிடத்தும் நம்பிக்கை கொண்டு (தூதர்களாகிய) அவர்களுள் எவருக்கிடையிலும் வேற்றுமை பாராட்டாதவர்களுக்கு, அவர்களின் நற்பலன்களை விரைவிலேயே அவன் வழங்குவான். (4:153)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறைவனுடன் சமாதானம் செய்யுங்கள்; உண்மையான இறையச்சத்துடன் பணி செய்யுங்கள்**

**வானம் தனது அசாதாரண விஷயங்களின் மூலம் எச்சரிக்கின்றது. பூமி நோய்களைக் கொண்டு எச்சரித்து வருகின்றது.**

**புரிந்தவர் அருளுக்குரியவர்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### துஆவின் அருட்கள்

துஆ இல்லையென்றால் எந்த மனிதனும் இறைவனை அடையாளம் காண்பதில் 'ஹக்குல் யகீன்' என்ற நிலையை அடைய முடியாது. துஆவின் மூலமாக 'இல்ஹாம்' கிடைக்கின்றது. துஆவின் மூலமாக நாம் இறைவனுடன் உரையாடுகின்றோம். மனிதன் கலப்பற்ற தன்மையுடனும், நேசத்துடனும், உண்மையுடனும், நன்றியுணர்வுடனும் துஆ செய்து செய்து ஃபனா (அர்ப்பணித்தல்) என்ற நிலையை அடைந்து விடும்பொழுது மக்களிடமிருந்து மறைவாக இருக்கின்ற அந்த உயிருள்ள இறைவன் அவரிடம் வெளிப்படுகின்றான்.

### புரிந்தவர் அருளுக்குரியவர்

இறைவனுடன் சமாதானம் செய்யுங்கள்; உண்மையான இறையச்சத்துடன் பணி செய்யுங்கள். வானம் தனது அசாதாரண விஷயங்களின் மூலம் எச்சரிக்கின்றது. பூமி நோய்களைக் கொண்டு எச்சரித்து வருகின்றது புரிந்தவர் அருளுக்குரியவர்.

### உயர்ந்த தைரியமும் வீரமும்

தைரியம் இழந்து விடக்கூடாது. தைரியம் என்பது நல்லொழுக்கத்தில் ஒன்றாகும். நம்பிக்கையாளர் மிகவும் தைரியசாலியாக இருக்கின்றார். எப்போதும் இறைவனுடைய மார்க்கத்திற்கு உதவி செய்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். ஒருபோதும் கோழைத்தனத்தை வெளிப்படுத்தக்கூடாது. கோழைத்தனம் நயவஞ்சகத்தின் அடையாளமாகும்.

நம்பிக்கையாளர் தைரியசாலியாகவும், வீரராகவும் இருக்கின்றார். ஆயினும் வீரம் என்பதன் பொருள் பொருத்தமற்ற சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்துவது என்பதல்ல. இடம் பொருளுக்கு மாற்றமாக எவர் செயல்படுவாரோ அவர் தவறிழைக்கின்றார். நம்பிக்கையாளரிடத்தில் அவசரம் இருக்காது. இன்னும் கூறப்போனால், அவர் மிகவும் விழிப்புடனும் பொறுமையுடனும் மார்க்கத்திற்கு உதவி செய்வதற்கு ஆயத்தமாக இருக்கின்றார். அவர் கோழையாக இருப்பதில்லை. இறைவனை கோபப்படுத்துகின்ற சில பணிகளை சில நேரத்தில் மனிதன் செய்து விடுகின்றான். உதாரணமாக, ஒரு யாசிப்பவரை ஒருவர் விரட்டி விட்டால் அது கோபத்திற்கு காரணியாகி விடுகின்றது. மேலும் இறைவனை கோபப்படுத்துகின்ற செயலாகும். அவருக்கு ஏதாவது ஒன்றை கொடுப்பதற்கு பாக்கியம் இல்லையென்றாலும் மென்மை மற்றும் ஒழுக்கத்துடன் நடந்து கொண்டால் குறைந்தபட்சம் ஒரு குவளை தண்ணீர் கூட கொடுத்து விட்டால் அது உள்ளத்தின் கடுமையை போக்குவதற்கு காரணியாகி விடும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 265,268 – 2018 ஆண்டு காதியான் பதிப்பு)

---

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

அடுத்த குறிப்பு ரஃபீவுத்தீன் சாஹிப் பட் அவர்களுடையதாகும். அன்னார் டிசம்பர் 6 ஆம் தேதி 92 வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் மவ்லவி கைருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களின் மகனாக அன்னார் இருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் அன்னார் இளமைப் பருவத்திலேயே வஸிய்யத் அமைப்பில் இணையும் நற்பேறு பெற்றார்கள். பல்வேறு இடங்களில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் வாய்ப்பு கிடைத்தது. பதூ முல்ஹி, நார்வால் மாவட்டத்தின் ஜமாஅத் தலைவராகவும், ஹல்கா அமீராகவும் அன்னார் இருந்துள்ளார்கள். வாஹ்கேண்ட் ஜமாஅத்தின் சதராகவும் அன்னார் இருந்துள்ளார்கள். இறைவழி கைதியாக ஆகுகின்ற கண்ணியமும் அன்னாருக்கு கிடைத்தது. நான்கு மகள்களையும், ஒரு மகனையும் தமது நினைவாக அன்னார் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் ஒரு மருமகனாகிய நஸீம் அஹ்மது சாஹிப் அவர்கள் நைஜீரியாவில் முபல்லிக்காக தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்று வருகின்றார்கள்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் இந்த அனைத்து மர்ஹூம்களின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மேலும் தனது அன்பர்களுக்கு அருகில் அவர்களுக்கு இடமளிப்பானாக. நான் கூறியதுபோன்று தொழுகைக்குப் பிறகு இவர்கள் அனைவரது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஒரு மனிதன் பார்த்த தம்பதிகளில் மிகவும் அழகிய தம்பதி ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) மற்றும் அன்னாரின் கணவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆவர்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா மற்றும் துன் நூரைன் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய பண்புகளின் நற்குறிப்புகள்**

**மதிப்பிற்குரிய மவ்லானா சுல்தான் மஹ்மூத் அன்வர் சாஹிப் முன்னாள் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா ரப்வா, நாஸிர் கித்மத்தே தர்வேஷான், மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மத் உமர் சாஹிப் முன்னாள் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் காதியான், மதிப்பிற்குரிய ஹபீப் அஹ்மத் சாஹிப் இப்னு முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் நைஜீரியாவின் முன்னாள் அமீர் மற்றும் மிஷினரி இன்சார்ஜ், மதிப்பிற்குரிய பத்ருஸ் ஸமான் சாஹிப் வகாலத் மால் யூ.கே வின் ஊழியர், மதிப்பிற்குரிய மன்ஸூர் அஹ்மத் தாஸிர் சாஹிப் ரப்வாவிலுள்ள உமூரே ஆமா துறையின் அலுவலர், மதிப்பிற்குரிய டாக்டர் இப்ராஹீம் மவாங்கா சாஹிப் தன்ஸானியா, மதிப்பிற்குரிய தீன் முஹம்மது சாஹிப் நன்கலி தர்வேஷ் அவர்களின் துணைவியாரான மதிப்பிற்குரிய ஸுக்ரா பேகம் சாஹிபா, மதிப்பிற்குரிய சவுத்ரி கராமத்துல்லாஹ் சாஹிப் அல் ஃபஸல் இண்டர்நேஷனல் பத்திரிகையின் முன்னாள் தன்னார்வலர், மதிப்பிற்குரிய சவுத்ரி முனவ்வர் அஹ்மது காலித் சாஹிப் ஜெர்மனி, பங்களாதேஷின் ஓய்வு பெற்ற முரப்பி மதிப்பிற்குரிய அஹ்மது தாரிக் தாஹிர் மஹ்மூத் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய நஸீரா பேகம் சாஹிபா, மதிப்பிற்குரிய ரஃபீயுத்தீன் சாஹிப் பட் ஆகிய ஒன்பது மர்ஹூம்களின் நற்குறிப்புகளை எடுத்துரைத்து ஜனாஸா காயிப் தொழுகையை ஹுஸூர் (அய்ய...) அவர்கள் தொழ வைத்தார்கள்**

**பாகிஸ்தான் மற்றும் அல்ஜீரியா அஹ்மதிகள் சந்தித்து வரும் எதிர்ப்பின் அடிப்படையில் மீண்டும் மீண்டும் துஆவிற்கு வலியுறுத்தப்பட்டது**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 22 ஜனவரி 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **சுல்ஹ்** மாதம் **22 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

இன்று நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பை தொடங்குவேன். சில வாரங்கள் வரை இது தொடந்து நடைபெறும். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி முதலில் இந்த விஷயத்தை நினைவிற் கொள்ள வேண்டும். அன்னார் பத்ர் யுத்தத்தில் சுயமே பங்கு பெறவில்லை. எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதர் போர் வெற்றி செல்வங்களில் பங்கு வழங்கி போரில் பங்கு பெற்றதாக அறிவித்த 8 நற்பேறு பெற்ற சஹாபிகளில் அன்னாரும் ஒருவர் ஆவார்கள்.

அன்னாரின் பெயர் உஸ்மான் பின் அஃபான் பின் அபுல் ஆஸ் பின் உமைய்யா பின் அப்தே ஷம்ஸ் பின் அப்தே மனாஃப் பின் குஸய்யி பின் கிலாப் ஆகும். இவ்வாறு அன்னாரின் பரம்பரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரம்பரையின் ஐந்தாவது கிளையான அப்தே மனாஃபுடன் சென்று இணைகின்றது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தாயார் பெயர் ஹஸ்ரத் அர்வா பின்த் குரைஸ் ஆகும். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தாய்வழி பாட்டியின் பெயர் உம்மே ஹகீம் பைலா பின்த் அப்துல் முத்தலிப் ஆகும். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தை ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் உடன் பிறந்த சகோதரியாக இருந்தார்கள்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தை ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தாய்வழி பாட்டி உம்மே ஹகீம் பைலா அவர்களும் இரட்டையர்களாக பிறந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தாயார் அர்வா பின்த் குரைஸ் அவர்கள் ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள். மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனா வந்து விட்டார்கள். மேலும் தனது மகன் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் மரணிக்கும் வரை மதீனாவிலேயே தங்கி இருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தந்தை (இஸ்லாத்திற்கு முன்பே) அறியாமையின் காலத்திலேயே மரணமடைந்து விட்டார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 377 உஸ்மான் பின் அஃபான் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அறியாமையின் காலகட்டத்தில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு அபூ அம்ர் என்ற சுட்டுப் பெயர் இருந்ததாக கூறப்படுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளாகிய ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்களின் மூலமாக அன்னாருக்கு அப்துல்லாஹ் என்ற மகன் பிறந்தபோது அதன் அடிப்படையில் முஸ்லிம்களிடத்தில் மீண்டும் அபூ அப்தில்லாஹ் என்ற சுட்டுப் பெயர் பிரபலமானது.

(சீரத் அமீருல் மூமினீன் உஸ்மான் பின் அஃபான்.... பக்கம் 15 – 2006 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

இப்னு இஸ்ஹாக்கின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது மகளான ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்களை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் திருமணம் முடித்து வைத்தார்கள். ஆனால் பதர் போர் நாட்களில் வஃபாத்தாகி விட்டார்கள். அதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது இரண்டாவது மகளான ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்களை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு மணம் முடித்துக் கொடுத்தார்கள். எனவே இதன் காரணமாக அன்னார் துன் நூரைன் என்று அழைக்கப்பட்டார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 377 உஸ்மான் பின் அஃபான் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் (ரலி) அவர்கள் ஒவ்வொரு இரவிலும் தஹஜ்ஜுத் தொழுகையில் மிக அதிகமாக திருக்குர்ஆனை ஓதி வந்தார்கள். திருக்குர்ஆன் ஒளியாகும்; இரவில் (தொழுகைக்காக) நிற்பதும் ஒளியாகும். எனவே அன்னார் துன் நூரைன் அதாவது இரண்டு ஒளிகளைக் கொண்டவர் என்ற பட்டத்தால் மிகவும் பிரபல்யமாகி விட்டார்கள்.

(சீரத் அமீருல் மூமினீன் உஸ்மான் பின் அஃபான்.... பக்கம் 16 – 2006 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

ஓர் சரியான அறிவிப்பிற்கேற் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் பிறப்பு தொடர்பாக இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆமுல் ஃபீல் சம்பவம் நடந்து ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு மக்காவில் பிறந்தார்கள். அன்னார் தாயிஃப் நகரத்தில் பிறந்ததாகவும் கூறப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அன்னார் சுமார் ஐந்து ஆண்டுகள் சிறியவராக இருந்தார்கள்.

(சீரத் அமீருல் மூமினீன் உஸ்மான் பின் அஃபான்.... பக்கம் 16 – 2006 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

அன்னார் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டது தொடர்பாக யஸீத் பின் ரூமான் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் மற்றும் ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) ஆகிய இருவரும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களுக்குப் பின்னால் சென்று கொண்டிருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருவருக்கும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்து வைத்தார்கள். மேலும் அவர்களுக்கு திருக்குர்ஆனை ஓதிக் காட்டினார்கள். மேலும் இஸ்லாத்தின் கடமைகளைப் பற்றியும் அவர்களுக்கு எடுத்துக் கூறினார்கள். மேலும் அவர்களிடம் அல்லாஹ்வின் புறமிருந்து கிடைக்கக்கூடிய கண்ணியம் மற்றும் மரியாதை பற்றிய வாக்குறுதிகளை வழங்கினார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) ஆகிய இருவரும் ஈமான் கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மைப்படுத்தினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் சமீபத்தில் தான் சிரியா நாட்டிலிருந்து திரும்பி வந்துள்ளேன். மேலும் நாங்கள் மஆன் மற்றும் ஸர்கா என்ற இடத்தில் தங்கியிருந்தோம் என்று கூறினார்கள். மஆன் மற்றும் உர்வன் நாட்டின் தெற்கு பக்கத்தில் ஹிஜாஸ் நாட்டின் எல்லைக்கு அருகில் ஒரு நகரம் உள்ளது. ஸர்கா என்ற இடம் மஆன் என்ற இடத்திற்கு அருகிலேயே உள்ளது.

எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் அங்கு தங்கியிருந்தோம். மேலும் நாங்கள் அங்கு உறங்கிக் கொண்டிருந்தோம். அப்போது அறிவிப்பாளர் ஒருவர், தூங்குபவர்களே! விழித்தெழுங்கள். நிச்சயமாக மக்காவில் அஹ்மத் தோன்றி விட்டார் என்று அறிவிப்புச் செய்தார். பின்னர் நாங்கள் திரும்பி வந்தடைந்தபோது தங்களைப் பற்றி நாங்கள் செவியுற்றோம் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கம் என்ற வீட்டில் நுழைவதற்கு முன்பாகவே, இஸ்லாத்தின் ஆரம்பத்திலேயே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொள்பவராக இருந்தார்கள். (முஃஜமுல் பல்தான்... பக்கம் 320 மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 472 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு அன்னார் மீது அநீதியும் இழைக்கப்பட்டது. ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். அப்போது அன்னாரின் சிறிய தந்தையாரான ஹகம் பின் அபீ அல்ஆஸ் பின் உமைய்யா அன்னாரை பிடித்து கயிற்றால் கட்டி விட்டார். நீர் உமது மூதாதையர்களின் மார்க்கத்தை விட்டு விட்டு புதிய மார்க்கத்தை ஒப்புக் கொண்டுள்ளீரா? என்று கேட்டார். மேலும் இறைவன் மீது ஆணையாக! நீ உனது புதிய மார்க்கத்தை கைவிட்டு விடாத வரை உன்னை நான் ஒருபோதும் விடுதலை செய்ய மாட்டேன் என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், இறைவன் மீது ஆணையாக! நான் அதனை ஒருபோதும் கைவிட மாட்டேன். மேலும் அந்த மார்க்கத்திலிருந்து ஒருபோதும் பிரிந்து செல்ல மாட்டேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தனது மார்க்கத்தில் உறுதியாக நிலைபெற்றிருக்கின்ற நிலையைக் கண்டபோது நிர்பந்தத்திற்கு உள்ளாகி ஹகம் அன்னாரை விட்டு விட்டார்.

(அத்தப்காத்துல் குப்ரா பக்கம் 31 உஸ்மான் பின் அஃபான் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்களை திருமணம் செய்தார்கள். இது தொடர்பான சம்பவம் இவ்வாறு கூறப்படுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவ வாதத்திற்கு முன்பாக அபூ லஹபின் மகன்களாகிய உத்பாவுடன் ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்களுக்கும், அன்னாரின் சிறிய சகோதரியான ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்களுக்கு உத்பாவின் சகோதரரான உதைபாவுடனும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஆனால் சூரா அல் மஸத் அதாவது சூரத்துல் லஹப் இறங்கியபோது அவர்களின் தந்தையான அபூ லஹப், நீங்கள் இருவரும் முஹம்மது (ஸல்) அவர்களின் மகள்களிடமிருந்து பிரிந்து விடாதவரை உங்களுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இருக்காது. இந்த வரனை முறித்து விடுங்கள் என்று அவர்களிடம் கூறினான். எனவே அவர்கள் இருவரும் திருமணத்திற்கு முன்பாகவே இரண்டு சகோதரிகளுக்கும் தலாக் கொடுத்து விட்டார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்காவிலேயே ஹஸ்ரத் ருகய்யா (ரலி) அவர்களை திருமணம் முடித்துக் கொண்டார்கள். மேலும் அன்னாருடன் அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். ஹஸ்ரத் ருகய்யா (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகிய இருவரும் அழகில் அவர்களுக்கு நிகர் அவர்களே ஆவர். எனவே أَحْسَنَ زَوْجَيْنِ رَاٰهُمَا إِنْسَانٌ رُقَيَّةُ وَزَوْجُهَا عُثْمَانُ என்று கூறப்படுகின்றது.

பொருள்: மிகவும் அழகிய தம்பதிகளை ஒரு மனிதன் கண்டுள்ளான் என்றால் அது ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) மற்றும் அன்னாரின் கணவரான ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களே ஆவர்.

(ஷரஹ் அல்லாமா ஸர்கானீ தொகுதி 4 பக்கம் 322, 323 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அப்துர் ரஹ்மான் பின் உஸ்மான் குரைஷி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மகளின் வீட்டிற்கு வருகை தந்தார்கள். அப்போது அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தலையைக் கழுவிக் கொண்டிருந்தார்கள். அப்போது மகளே! அபூ உபைதில்லாஹ்வுடன் நல்ல முறையில் நடந்து வருவீராக. நிச்சயமாக இவர் எனது சஹாபிகளில் ஒழுக்கத்தின் அடிப்படையில் எல்லாரையும் விட என்னுடன் ஒப்புமை உடையவராக இருக்கின்றான்.

(அல் முஃஜமுல் கபீர் லித்திப்ரானீ தொகுதி 1 பக்கம் 76 ஹதீஸ் எண் 98 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாஅத் தராஸுல் அரபியில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரத் சம்பவம் பற்றி இப்னு இஸ்ஹாக் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது சஹாபிகளுக்கு சோதனைகள் ஏற்பட்டு வருவதை கண்டார்கள். மேலும் அல்லாஹ்வுடன் அன்னாருக்கு இருந்த உறவு மற்றும் அந்தஸ்து காரணமாகவும் தனது சிறிய தந்தை அபூ தாலிப் அவர்களின் காரணமாகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாதுகாப்பாக இருந்தார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாதுகாப்புடன் இருந்தார்கள். அதே நேரத்தில் தனது சஹாபிகள் சோதனைக்கு உள்ளாக்கப்படுவதை தடுப்பதற்கு அன்னார் வலிமையும் ஆற்றலும் பெற்றிருக்கவில்லை. ஆக ஒரு வகையில் அன்னார் ஓரளவிற்கு சுயம் பாதுகாப்பில் இருந்தார்கள் என்றாலும் தனது சஹாபிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை தடுத்து நிறுத்துவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆற்றல் பெற்றிருக்கவில்லை. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபிகளிடம், நீங்கள் அபிஸீனியாவின் பூமியை

நோக்கி செல்லுங்கள். அங்கு ஓர் அரசர் இருக்கின்றார். அவரது அரசாட்சியின்கீழ் எவர் மீதும் அநீதி இழைக்கப்படுவதில்லை. மேலும் அது உண்மையின் நிலமாகும் என்று கூறினார்கள். மேலும் அல்லாஹ் இந்த சோதனையிலிருந்து உங்களுக்கு விடுதலை வழங்கி விடுவான் என்றும் கூறினார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகள் குழப்பங்களின் அச்சத்தின் காரணமாகவும் மேலும் தனது மார்க்கத்தின் மூலமாக அல்லாஹ்வின் பக்கம் சென்றடைவதற்காகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அபிஸீனியா பூமியை நோக்கி புறப்பட்டார்கள். இதுவே இஸ்லாத்தில் நடைபெற்ற முதல் ஹிஜ்ரத் ஆக இருந்தது.

அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்த சஹாபிகளில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் அன்னாரின் துணைவியார் அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளாகிய ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்களும் அடங்குவார்கள்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷாம் பக்கம் 237,238 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்வதற்கு புறப்பட்டபோது அன்னாருடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளாகிய ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை அதன் செய்தி சென்றடைவதில் தாமதமாகி விட்டது. அதாவது ஹிஜ்ரத் செய்தார்கள் என்றால் எங்கு வரை சென்றடைந்தார்கள்? என்ன நிலைமை? என்ற தகவல் கிடைக்காமல் இருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (வீட்டை விட்டு) வெளியேறி அவர்களைப் பற்றிய செய்திக்காக காத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பெண்மணி வந்தார். மேலும் அவர்களைப் பற்றிய செய்தியை கூறினார். பின்னர் ஹஸ்ரத் லூத் (அலை) அவர்களுக்குப் பிறகு தனது குடும்பத்துடன் அல்லாஹ்வின் வழியில் ஹிஜ்ரத் செய்த முதல் மனிதர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆவார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(மஜ்மவுஸ் ஸவாஹித்... தொகுதி 3 பக்கம் 58 கிதாபுல் மனாகிப் ஹதீஸ் எண் 14498 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்கள் அபிஸீனிய மண்ணை நோக்கி ஹிஜ்ரத் செய்வதற்கு எண்ணம் கொண்டார்கள். அப்போது நீங்கள் ருகைய்யாவையும் உடன் அழைத்துச் செல்லுங்கள். உங்களில் ஒருவர் மற்றவருக்கு ஆறுதல் வழங்கி வருவார் என்பது எனது எண்ணமாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாவது இருவரும் இருந்தால் ஒருவர் மற்றவருக்கு ஆறுதலாக இருக்கலாம்.

அடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகளாகிய ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களிடம் நீங்கள் சென்று அவர்கள் இருவரைப் பற்றியும் செய்தியை கொண்டு வாருங்கள். அவர்கள் சென்று விட்டார்களா? எங்கு சென்றடைந்துள்ளார்கள்? வெளியில் என்ன நிலவரம்? என்பதை அறிந்து வரும்படி கூறினார்கள். ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் திரும்பி வந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள்.

அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒரு கழுதையின் மீது விரிப்பை விரித்து அதில் ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்களை அமர்த்திக் கொண்டு கடலை நோக்கி புறப்பட்டுச் சென்று விட்டார்கள். அப்போது அபூபக்ர் அவர்களே! ஹஸ்ரத் லூத் (ரலி) மற்றும் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்குப் பிறகு ஹிஜ்ரத் செய்பவர்களில் முதல் முதலில் ஹிஜ்ரத் செய்யக்கூடிவர்கள் இவர்கள் ஆவர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்தத்ரக் தொகுதி 4 பக்கம் 414 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பின்னர் அபிஸீனியாவிலிருந்து திரும்பி வந்த சம்பவம் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இப்னு இஸ்ஹாக் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எந்த சஹாபிகள் அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்திருந்தார்களோ அவர்களுக்கு மக்கத்துவாசிகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்று செய்தி கிடைத்தது. அப்போது முஹாஜிர்கள் அபிஸீனியாவிலிருந்து மக்காவிற்கு திரும்பினார்கள். அவர்கள் மக்காவிற்கு அருகில் வந்தவுடன் அது தவறான செய்தி என்பது அவர்களுக்கு தெரிய வந்தது. எனவே அவர்கள் மறைவான முறையிலும் அல்லது சிலரின் அடைக்கலத்தின் கீழும் மக்காவில் நுழைந்து விட்டார்கள். அவர்களில் சிலர் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த நபர்களும் இருந்தனர். பின்னர் பதர் மற்றும் உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். சிலர் எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள் என்றால் அவர்களை மக்கத்து காஃபிர்கள் தடுத்து நிறுத்தி விட்டனர். அவர்களால் பதர் போரில் பங்கு பெற முடியாமல் போனது. அபிஸீனியாவிலுருந்து மக்காவிற்கு வருகை தந்து பின்னர் மீண்டும் மக்காவிலிருந்து மதீனா ஹிஜ்ரத் செய்யக்கூடிவர்களில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் அன்னாரது மனைவி அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளாகிய ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்களும் அடங்குவார்கள்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா பக்கம் 265, 266 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அபிஸீனியாவில் சில ஆண்டுகள் தங்கியிருந்தார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. அதன் பிறகு குரைஷிகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக செய்தி கிடைத்த போது சில சஹாபிகள் தங்களது நாட்டிற்கு திரும்பி விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் திரும்பி வந்து விட்டார்கள். அந்த செய்தி பொய்யானது என்று இங்கு திரும்பி வந்தபோது தெரிய வந்தது. அதன் அடிப்படையில் சில சஹாபிகள் மீண்டும் அபிஸீனியாவிற்கு திரும்பிச் சென்று விட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்காவிலேயே தங்கி இருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்வதற்கான சூழல் உருவாகி விட்டது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது அனைத்து சஹாபிகளுக்கும் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்வதற்கு கட்டளையிட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் தனது குடும்பத்துடன் மதீனாவிற்கு சென்று விட்டார்கள்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 1 பக்கம் 178)

ஓர் அறிவிப்பில் இந்த குறிப்பும் கிடைக்கின்றது. அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மீண்டும் அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்து சென்று விட்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 31 உஸ்மான் பின் அஃபான் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாஅத் தராஸுல் அரபியில் அச்சிடப்பட்டது)

ஆனால் பெரும்பாலான வாழ்க்கை வரலாற்று புத்தகங்களில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அபிஸீனியாவை நோக்கி இரண்டாவது முறையாக ஹிஜ்ரத் செய்த நற்குறிப்பு இடம் பெறவில்லை. எனவே அபிஸீனியா ஹிஜ்ரத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். அதிலிருந்து சில பகுதியை முன்பு சில சஹாபிகளின் நற்குறிப்பில் நான் எடுத்து வைத்துள்ளேன். எவ்வாறிருப்பினும் இங்கும் அது பற்றி குறிப்பிடுவது அவசியமாகும்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் ஆராய்ச்சி என்னவென்றால் அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: முஸ்லிம்களுக்கு எல்லையில்லா துன்பம் ஏற்பட்டபோதும், குரைஷிகள் துன்பம் கொடுப்பதில் முன்னேற்றம் அடைந்தபோதும் ஹஸ்ரத்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்யுங்கள். அபிஸீனியாவின் மன்னர் நீதியை விரும்புபவர் ஆவார். மேலும் அவரது அரசாங்கத்தின்கீழ் எவர் மீதும் அநீதி இழைக்கப்படுவதில்லை என்று முஸ்லிம்களிடம் கூறினார்கள்.

'ஹப்ஷா' நாடு ஆங்கிலத்தில் எத்தோபியா அல்லது அபிஸீனியா என்று அழைக்கப்படுகின்றது. ஆஃப்ரிக்க கண்டத்தில் வட கிழக்கில் அது அமைந்துள்ளது. மேலும் புவி சார் அமைப்பின் அடிப்படையில் அரேபியாவிற்கு தெற்கில் மிகவும் அருகில் அது அமைந்துள்ளது. அதற்கு இடையில் புகைரா அஹ்மர் என்ற நாட்டைத் தவிர்த்து வேறு எந்த நாடும் இடம் பெறவில்லை. அக்காலகட்டத்தில் அபிஸீனியாவில் ஓர் உறுதிவாய்ந்த கிறித்தவ அரசாங்கம் நிலைபெற்றிருந்தது. அங்கு அரசர் நஜாஷி என்று அழைக்கப்பட்டு வந்தார். இன்னும் சொல்வதென்றால் இன்று வரை அங்குள்ள ஆட்சியாளர்கள் அதே பெயராலேயே அழைக்கப்படுகின்றார்கள். அபிஸீனியாவுடன் அரேபியாவிற்கு அந்நாட்களில் வியாபார தொடர்பு இருந்து வந்தது. அபிஸீனியாவின் தலை நகரம் தற்போது அமைந்துள்ள அதோவா என்ற நகரத்திற்கு அருகில் அக்ஸூம் என்ற இடமாக இருந்தது. இன்று வரை அது ஒரு புனித நகரின் வடிவில் காணப்படுகின்றது. அக்ஸூம் அந்த நாட்களில் ஓர் ஆற்றல் மிக்க பெரிய வல்லரசாக இருந்தது. அந்நேரத்தில் நஜ்ஜாஷி அரசரின் சொந்தப் பெயர் அஸ்ஹமா ஆகும். அவர் ஒரு நீதியாளராகவும், வலிமைவாய்ந்த அரசராகவும் இருந்தார்.

எவ்வாறிருப்பினும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் உச்சத்தை அடைந்தபோது எவருக்கெல்லாம் சாத்தியமோ அவர்கள் அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்து சென்று விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கிணங்க நபவி **5** ஆம் ஆண்டு ரஜப் மாதத்தில் **11** ஆண்கள், **8** பெண்கள் அபிஸீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். அவர்களில் மிகவும் பிரபல்யமான பெயர்கள் இதுவாகும்: ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் துணைவியுமான ஹஸ்ரத் ருகைய்யா (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் இப்னுல் அவாம் (ரலி), ஹஸ்ரத் அபூ ஹுதைஃபா பின் உத்பா (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் (ரலி), ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி), ஹஸ்ரத் அபூ சலமா பின் அப்துல் அஸத் (ரலி) மற்றும் அன்னாரின் துணைவியாரான ஹஸ்ரத் உம்மே சலமா (ரலி) ஆகியோர் ஆவர்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் தொடர்ந்து எழுதுகின்றார்கள்: இதில் ஆச்சரியத்திற்குரிய ஒரு விஷயம் என்னவென்றால், இந்த ஆரம்ப கால முஹாஜிர்களில் பெரும்பாலான மக்கள் குறைஷிகளின் வலிமை வாய்ந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். பலவீனமானவர்கள் மிகக் குறைவாகவே தென்படுகிறார்கள். இதிலிருந்து இரண்டு விஷயங்கள் தெரிய வருகின்றன. முதலாவது, வலிமை வாய்ந்த கோத்திரங்களைச் சேர்ந்த மக்களும் குரைஷிகளின் அநீதிகளிலிருந்து பாதுகாப்பாக இருக்கவில்லை. இரண்டாவது, பலவீனமான மக்கள் உதாரணமாக, அடிமைகள் போன்றோர் அக்காலத்தில் எந்த அளவிற்கு பலவீனமானவர்களாகவும், இயலாதவர்களாகவும் இருந்தார்கள் என்றால் ஹிஜ்ரத் செய்வதற்கு அவர்களுக்கு ஆற்றல் இருந்திருக்கவில்லை.

இந்த முஹாஜிர்கள் தெற்கு நோக்கி பயணம் செய்து ஷுஅய்பா என்ற இடத்தை அடைந்தார்கள். அந்த இடம் அக்காலத்தில் அரபிகளின் ஒரு துறைமுகமாக இருந்தது. அப்போது அல்லாஹ்வின் அருள் எப்படி வெளிப்பட்டது என்றால், முஹாஜிர்களுக்கு ஒரு வணிகக் கப்பல் கிடைத்து விட்டது. அது அபிஸீனியாவை நோக்கி புறப்படுவதற்கு முற்றிலும் தயாராக இருந்தது. எனவே இவர்கள் அனைவரும் அதில் பாதுகாப்புடன் ஏறி அமர்ந்து விட்டார்கள். கப்பலும் புறப்பட்டு விட்டது. மக்கத்து குரைஷிகளுக்கு இவர்களின் ஹிஜ்ரத்தைப் பற்றி தெரிய வந்தபோது, இந்த இரை எளிதாக கைநழுவி விட்டதே என்று அவர்கள் மிகவும் கோபம் கொண்டனர். எனவே அவர்கள் முஹாஜிர்களை பின் தொடர்ந்து சென்றனர். ஆனால் அவர்களின் ஆட்கள் கடற்கரையை அடைந்தபோது கப்பல் புறப்பட்டு சென்று விட்டது. எனவே அவர்கள் வெறும் கையுடன் தோல்வியடைந்தவர்களாக திரும்பி வந்தனர்.

அபிஸீனியாவை சென்றடைந்ததும் முஸ்லிம்களுக்கு மிகவும் பாதுகாப்பான வாழ்க்கை கிடைத்தது. அல்லாஹ் அல்லாஹ் என்று அவர்களுக்கு குரைஷிகளின் அநீதிகளிலிருந்து விடுதலையும் கிடைத்தது. ஆயினும் சில வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறியிருப்பதைப்போன்று இந்த முஹாஜிர்கள் அபிஸீனியாவை சென்றடைந்து அதிக காலம் கழிந்திருக்கவில்லை. அதற்குள் அனைத்து குரைஷிகளும் முஸ்லிமாகி விட்டனர். மக்காவில் தற்போது முற்றிலும் அமைதியும், பாதுகாப்பும் நிலவுகிறது என்ற வதந்தி வேகமாக பரவியது. எனவே பெரும்பாலான முஹாஜிர்கள் சற்றும் சிந்திக்காமல் திரும்பி சென்று விட்டனர். இந்த மக்கள் மக்காவை சென்றடைந்தபோது அந்த செய்தி தவறு என்பது அவர்களுக்கு தெரிய வந்தது. தற்போது அவர்கள் ஒரு பெரும் துன்பத்தை எதிர்கொண்டனர். இறுதியில் சிலர் வழியிலேயே திரும்பி வந்து விட்டனர். சிலர் ஒளிந்து மறைந்து அல்லது சில வலிமை கொண்ட நபருடன் மக்காவிற்கு சென்று விட்டார்கள். இது நபவி ஐந்தாம் ஆண்டு ஷவ்வால் மாதத்தில் நடந்த சம்பவம் ஆகும். அதாவது ஹிஜ்ரத்தின் துவக்கம் மற்றும் முஹாஜிர்கள் திரும்பி வந்த சம்பவம் இரண்டிற்கும் இடையே வெறும் மூன்று மாத இடைவெளி தான் இருந்தது.

ஆக உண்மையிலேயே இந்த வதந்தி முற்றிலும் பொய்யானதும், அடிப்படையற்றதுமாக இருந்தது. முஹாஜிர்களை அபிஸீனியாவிலிருந்து திரும்பி வர வைப்பதற்காகவும், அவர்களுக்கு துன்பம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் குரைஷிகள் இந்த வதந்தியை பரப்பி இருந்தனர். இன்னும் கூறப்போனால் மிகவும் ஆழமாக சீர்தூக்கிப் பார்த்தால் இந்த வதந்தி மற்றும் முஹாஜிர்கள் திரும்பி வந்த சம்பவம் அடிப்படையற்றதாக தெரிகிறது. ஆயினும் இதை உண்மை என்று ஏற்றுக் கொண்டால் பின்னர் சில ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் அந்த சம்பவம் நடைபெற்றிருக்கும். இதனை சரி என்று ஏற்றுக் கொண்டால் பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சில ஆண்டுகள் தங்கியிருந்தார்கள் என்ற சிலரின் அறிவிப்பு தவறாகி விடுகின்றது. இதனை தவறாக கருதினால் பின்னர் மூன்று, நான்கு மாதங்களில் அன்னார் திரும்பி வந்து விட்டார்கள்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் ஆராய்ச்சி என்னவென்றால், இந்த விஷயம் தவறாகும். அன்னார் எழுதுகின்றார்கள்: இதனை சரியானதாக ஏற்றுக் கொண்டால் பின்னர் சில ஹதீஸ்களில் கூறப்பட்டிருப்பதன் அடிப்படையில் அந்த சம்பவம் நடைபெற்றிருக்கும். புகாரியிலும் அது பற்றி இவ்வாறு வருகின்றது. ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஃபத்துல்லாஹ்வின் வளாகத்தில் நஜ்ம் எனும் அதிகாரத்தை ஓதிக் கொண்டிருந்தார்கள். அப்போது நிராகரிப்பவர்களின் தலைவர்களும் அங்கு இருந்தார்கள். சில முஸ்லிம்களும் அங்கு இருந்தார்கள். அந்த அதிகாரத்தை ஓதி முடித்தவுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஜ்தா செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஏனைய அனைத்து முஸ்லிம்களும், நிராகரிப்பாளர்களும் சஜ்தா செய்தனர். எவ்வாறிருப்பினும் நிராகரிப்பாளர்கள் சஜ்தா செய்ததன் காரணம் பற்றி ஹதீஸில் கூறப்படவில்லை. அவர்கள் ஏன் சஜ்தா செய்தனர் என்ற காரணம் தெரியவில்லை. எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் தாக்கம் நிறைந்த குரலுடன் இறை வசனங்களை ஓதினார்கள். மேலும் அந்த வசனங்களும் எப்படிப்பட்டதாக இருந்ததென்றால், அதில் இறைவனின் ஏகத்துவமும், இறைவனின் வல்லமை மற்றும் ஆற்றல் தொடர்பாகவும்

மிகவும் பரந்துபட்ட அளவில் தெளிவாக சித்தரம் வரையப்பட்டிருந்தது. இறைவனின் கருணைகள் நினைவூட்டப்பட்டன. மேலும் குரைஷிகள் தனது தீங்கிலிருந்து விலகவில்லை என்றால் அவர்களுக்கு முன்னால் சென்ற அவர்களின் சமுதாயத்தின் நிலையே அவர்களுக்கும் ஏற்படும் என்று மிகவும் கம்பீரமான மற்றும் தாக்கம் நிறைந்த வார்த்தைகளால் அவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

பின்னர் வசனங்களின் கடைசியில், வாருங்கள்; அல்லாஹ்வுக்கு முன்னால் சஜ்தாவில் வீழ்ந்து விடுங்கள் என்று அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. இந்த வசனங்களை ஓதிய பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அனைத்து முஸ்லிம்களும் திடீரென சஜ்தாவில் விழுந்து விட்டார்கள். இந்த வேகம் மற்றும் அந்த காட்சி எப்படிப்பட்ட ஆச்சரியமான தாக்கத்தை குரைஷிகள் மீது ஏற்படுத்தியது என்றால் அவர்களும் தன்னை அறியாமல் முஸ்லிம்களுடன் சஜ்தாவில் வீழ்ந்து விட்டார்கள். இது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. ஏனென்றால் அதுபோன்ற சந்தர்ப்பங்களில் அல்லது அதுபோன்ற சூழல்களில் சில முறை மனித உள்ளம் தாக்கத்திற்கு உள்ளாகி விடுகின்றது. மேலும் தன்னையும் அறியாமல் அதுபோன்ற செயல்களை செய்து விடுகின்றது. சில நேரத்தில் ஒரு கடுமையான மற்றும் எதிர்பாராத ஆபத்தின்போது ஒரு நாத்தீகவாதி கூட அல்லாஹ்; அல்லாஹ் என்றோ அல்லது ராம், ராம் என்றோ அழைப்பதுண்டு. நானும் சில நாத்தீகர்களிடம் கேட்டுள்ளேன். அதற்கு அவர்கள் எங்களுக்கு இறைவன் மீது நம்பிக்கை இல்லை என்பது சரியான விஷயம்தான். ஆயினும் அதுபோன்ற அபாயகரமான நிலைமையின்போது எங்களையும் அறியாமல் எங்களது நாவிலிருந்து இத்தகைய சொற்கள் வந்து விடுகின்றன என்று அவர் கூறினார்.

எவ்வாறிருப்பினும், குரைஷிகள் நாத்தீகர்களாக இருந்திருக்கவில்லை. இன்னும் கூறப்போனால், எல்லா நிலையிலும் அவர்கள் இறை இருப்பை நம்பக்கூடியவர்களாக இருந்தார்கள். எனவே அவர்கள் மீது அதன் தாக்கம் ஏற்பட்டது. அதாவது தாக்கம் நிறைந்த மற்றும் கம்பீரமிக்க இறை வேதத்தின் வசனங்கள் ஓதப்பட்ட பிறகு முஸ்லிம்களின் ஜமாஅத் திடீரென சஜ்தாவில் விழுந்து விட்டது. அதனால் வியத்தகு தாக்கம் இவ்வாறு வெளிப்பட்டது. அதாவது முஸ்லிம்களுடன் குரைஷிகளும் தங்களையும் அறியாமல் சஜ்தாவில் வீழ்ந்து விட்டனர். ஆயினும் அதுபோன்ற தாக்கம் பொதுவாக தற்காலிகமானதாக இருக்கின்றது. பின்னர் மனிதன் விரைவாகவே தனது அசல் நிலைக்கு திரும்பி விடுகின்றான். எனவே இங்கும் அவ்வாறே நிகழ்ந்தது. சஜ்தாவிலிருந்து எழுந்த பிறகு குரைஷிகள் மீண்டும் அதே சிலை வணங்கிகளாகவே ஆகி விட்டனர். அவர்கள் ஏகத்துவவாதிகளாக ஆகிவிடவில்லை.

எவ்வாறிருப்பினும் இது ஒரு சம்பவமாகும். ஹதீஸிலிருந்து இது நிரூபணமாகின்றது. அபிஸீனியாவிலிருந்து முஹாஜிர்கள் திரும்பி வந்த செய்தி உண்மையென்றால், இந்த சம்பவத்திற்குப் பிறகு அபிஸீனியாவிலிருந்து மக்காவிற்கு முஹாஜிர்களை திரும்ப கொண்டு வர வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த குரைஷிகள் தனது இந்த செயலை அடிப்படையாக கொண்டு மக்காவில் அனைவரும் முஸ்லிமாகி விட்டனர். தற்போது மக்காவில் முஸ்லிம்களுக்கு முற்றிலும் அமைதி நிலைபெற்று விட்டது என்ற வதந்தியை பரப்பி இருக்கலாம் என்று தெரிய வருகின்றது. இந்த வதந்தி அபிஸீனியாவிற்கு சென்றிருந்த முஹாஜிர்களை அடைந்தபோது அதை செவியுற்று அவர்கள் இயல்பாகவே மகிழ்ச்சியுற்றனர். அதனை கேட்டவுடனேயே மகிழ்ச்சியின் உணர்வால் திரும்பி வந்து விட்டனர். ஆனால் அவர்கள் மக்காவிற்கு அருகே வந்தடைந்ததும் உண்மையான நிலவரத்தை அறிந்து கொண்டனர். எனவே சிலர் ஒளிந்து மறைந்தும், சிலர் ஆற்றல் வாய்ந்த மற்றும் தகுதி படைத்த குரைஷிய தலைவர்களின் அடைக்கலத்தின் கீழும் மக்காவிற்குள் சென்றனர். மேலும் சிலர் திரும்பிச் சென்று விட்டனர். எனவே குரைஷிகள் முஸ்லிம்களாகி விட்டனர் என்ற வதந்தியில் ஏதாவது உண்மை இருக்குமென்றால், அது சூரா அந்நஜ்ம் வசனங்களை ஓதியபோது சஜ்தா செய்த சம்பவத்துடன் தொடர்புடைய அளவில் மட்டுமே இருக்கும்.

எவ்வாறிருப்பினும் அபிஸீனிய முஹாஜிர்கள் திரும்பி வந்தனர். பின்னர் அவர்களில் பெரும்பாலார் திரும்பிச் சென்று விட்டனர். ஏனென்றால் குரைஷிகள் நாளுக்கு நாள் துன்பம் விளைவிப்பதில் முன்னேறிக் கொண்டே சென்றனர். அவர்களின் அநீதி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப ஏனைய முஸ்லிம்களும் இரகசியமாக ஹிஜ்ரத் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டனர். சந்தர்ப்பத்தைப் பார்த்து மெதுமெதுவாக வெளியேறிக் கொண்டு சென்றனர். இவ்வாறு இந்த ஹிஜ்ரத்தின் தொடர் ஆரம்பமானது. இறுதியில் அபிஸீனிய முஹாஜிர்களின் எண்ணிக்கை 101 ஐ எட்டி விட்டது. அதில் 18 பெண்களும் இருந்தனர். மேலும் மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மிகவும் குறைவான முஸ்லிம்களே தங்கியிருந்தனர். இந்த ஹிஜ்ரத்தை சில வரலாற்று ஆய்வாளர்கள் இரண்டாவது அபிஸீனிய ஹிஜ்ரத் என்று குறிப்பிடுகின்றனர்.

தொடர்ந்து ஹஸ்ரத் பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் தனது ஒரு கருத்தை குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்: மற்றொரு விஷயம் இந்த வதந்தி மற்றும் முஹாஜிர்கள் திரும்பி வந்த சம்பவத்தை முற்றிலும் சந்தேகத்திற்குள்ளாக்கி விடுகின்றது. அது என்னவென்றால், வரலாற்றில் அபிஸீனிய ஹிஜ்ரத் நபித்துவத்தின் ஐந்தாம் ஆண்டு ரஜப் மாதம் நிகழ்ந்ததாகவும், சஜ்தாவின் சம்பவம் நபித்தவத்தின் ஐந்தாம் ஆண்டு ரமலான் மாதம் நடந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் அதே வரலாற்றில் இந்த வதந்தியின் காரணமாக அபிஸீனிய முஹாஜிர்கள் நபித்துவத்தின் ஐந்தாம் ஆண்டு ஷவ்வால் மாதம் மக்காவிற்கு திரும்பி வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. ஆக ஹிஜ்ரத் ஆரம்பமானதும், முஹாஜிர்கள் திரும்பி வந்ததும் இரண்டு சம்பவங்களுக்கு இடையிலும் வெறும் இரண்டு மாதத்திலிருந்து மூன்று மாத இடைவெளிதான் இருந்துள்ளது. சஜ்தாவின் தேதியிலிருந்து நாம் காலத்தை கணக்கிட்டால் பின்னர் இந்த இடைப்பட்ட காலம் ஒரு மாதம் என தெரிய வருகிறது.

இப்போது அக்காலத்தின் சூழ்நிலையின் அடிப்படையில் மக்கா மற்றும் அபிஸீனியாவிற்கு இடையில் இந்த அளவிற்கு மிகக் குறைந்த காலகட்டத்தில் மூன்று முறை பயணம் முழுமை பெறுவது என்பது முற்றிலும் சாத்தியமற்ற ஒன்றாகும். அதாவது முதலில் முஸ்லிம்கள் மக்காவிலிருந்து அபிஸீனியாவிற்கு செல்வது, அதன் பிறகு ஒருவர் மக்காவிலிருந்து குரைஷிகள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டனர் என்ற செய்தி அபிஸீனியாவிற்கு எடுத்து வந்தது, பின்னர் முஸ்லிம்கள் அபிஸீனியாவிலிருந்து புறப்பட்டு மக்காவிற்கு வந்தது ஆகிய இந்த மூன்று பயணங்களும் முழுமை பெறுவது சாத்தியமற்ற ஒன்றாகும். ஏனென்றால் பயணத்திற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டியதிருந்தது. அதற்கான பொருட்கள் இருக்கின்றன. அவை அனைத்தும் இந்த குறைவான காலகட்டத்தில் நடைபெறுவது நிச்சயம் சாத்தியமற்ற ஒன்றாகும். மேலும் சஜ்தாவின் காலத்திலிருந்து அபிஸீனிய முஹாஜிர்கள் திரும்பி வரும் வரையிலான இரண்டு பயணங்களும் முழுமை பெறுவதும் முற்றிலும் அசாத்தியமான ஒன்றாகும். ஏனென்றால் அக்காலத்தில் மக்காவிலிருந்து அபிஸீனியா செல்வதற்கு முதலில் தெற்குப் பகுதிக்கு செல்ல வேண்டும். பின்னர் அங்கிருந்து படகில் ஏறி பயணிக்க வேண்டும். அது எப்போதும் சாத்தியமும் இல்லை. ஏனெனில் அஹ்மர் கடலைத் தாண்டி ஆஃப்ரிக்காவின் கடல் பகுதியை வந்தடைய வேண்டியதிருந்தது. பின்னர் அந்த கடற்பகுதியிலிருந்து தொலைவில் இருந்த அபிஸீனியாவின் தலைநகரமான அக்ஸூம் நகரத்தை வந்தடைய வேண்டியதிருந்தது. அக்காலத்தில் நடைபெற்ற மெதுவான பயணத்தின் அடிப்டையில் ஒன்றரை அல்லது இரண்டு மாதத்தை விட குறைவாக ஒருபோதும்

அந்த பயணம் முழுமை பெற்றிருக்க முடியாது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 146–152)

எவ்வாறிருப்பினும், காரணங்கள் என்னவாக இருந்தாலும் சில காலத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அபிஸீனியாவிலிருந்து திரும்பி வந்து விட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தார்கள்.

ஹஸ்ரத் முஹம்மது பின் ஜாஃபர் பின் ஸுபைர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அப்போது அன்னார் பனூ நஜ்ஜாரின் கோத்திரத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் ஹஸ்ஸாம் பின் சாபித் (ரலி) அவர்களின் சகோதரரான ஹஸ்ரத் அவ்ஸ் பின் சாபித் (ரலி) அவர்களின் வீட்டில் தங்கியிருந்தார்கள்.

மூஸா பின் முஹம்மது தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோருக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஓர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி) அவர்களின் தந்தை ஹஸ்ரத் அவ்ஸ் பின் சாபித் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோருக்குமிடையில் சகோதரத்துவ பந்தம் நிலைநாட்டப்பட்டிருந்தது. ஹஸ்ரத் உபாதா சஅத் பின் உஸ்மான் ஸுரகி அவர்களுடன் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு சகோதரத்துவ பந்தம் ஏற்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 31 உஸ்மான் பின் அஃபான் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாஅத் தராஸுல் அரபியில் அச்சிடப்பட்டது)

மற்றோர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடன் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தி இருந்தார்கள்.

ஆக தப்காத்துல் குப்ராவில் இவ்வாறு எழுதுப்பட்டுள்ளது. இப்னீ லபீபா அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்கள் முற்றிகையிடப்பட்டபோது அதாவது எதிரிகள் அன்னாரை முற்றுகையிட்டிருந்தனர். எல்லா வகையான தடைகளையும் ஏற்படுத்தி இருந்தனர். அப்போது இறுதி நாட்களில் அன்னார் ஓர் உயரமான மாடியில் ஜன்னலின் வழியாக எட்டிப் பார்த்து உங்களில் தல்ஹா இருக்கின்றாரா? என்று கேட்டார்கள். ஆம் இருக்கின்றார் என்று மக்கள் பதிலளித்தனர். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், நான் உங்களிடம் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கேட்கின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார்களுக்கு மத்தியில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தியிருந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடன் எனது சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தி இருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? தெரியாதா? என்று கேட்டார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடன் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். அப்போது ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! இது உண்மையாகும் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டை முற்றுகையிட்டிருந்த அருகிலிருந்த எதிரிகள் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். அதாவது நீங்கள் என்ன செய்துள்ளீர்கள் என்று அவர்களை விசாரித்தார்கள். அப்போது ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் மிகவும் தைரியத்துடன் இவ்வாறு பதிலளித்தார்கள். அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சத்தியம் செய்து என்னிடம் கேட்டார்கள். அன்னார் எதைப்பற்றி கேட்டார்களோ அந்த சம்பவம் என் கண்களுக்கு முன்னால் நடந்தது. அவ்வாறிருக்க நான் சாட்சியம் கொடுக்காமல் இருப்பது எங்கனம் சாத்தியமாகும்? (என்னால் பொய் கூற முடியாது. நீங்கள் எதிர்க்க வேண்டுமென்றால் எதிர்த்துக் கொள்ளுங்கள்).

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 38 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாஅத் தராஸுல் அரபியல் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்களின் மரணம் மற்றும் ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்களின் திருமண சம்பவம் தொடர்பாக இவ்வாறு நமக்கு குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் முக்னிஃப் பின் ஹாரிஸா அன்ஸாரி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் யுத்தத்திற்கு புறப்பட்டபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை தனது மகனான ஹஸ்ரத் ருக்யா (ரலி) அவர்களிடம் விட்டு விட்டு சென்றார்கள். அன்னார் நோயுற்றிருந்தார்கள். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கியிருந்த பதர் போர் வெற்றி செய்தியை ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் மதீனாவிற்கு கொண்டு வந்த நாளில் அன்னார் மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு பதர் போர் செல்வத்தில் பங்கை நிர்ணயித்தார்கள். பதர் போரில் பங்கு பெற்றிருந்தவருக்கு சமமாக அன்னாரின் பங்கு இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு தமது புதல்வியான ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்களை ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் அவர்களுக்கு திருமணம் முடித்துக் கொடுத்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 32 உஸ்மான் பின் அஃஃபான் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாஅத் தராஸுல் அரபியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை பள்ளிவாசலின் கதவருகே சந்தித்தார்கள். மேலும் உஸ்மானே! இவர் ஜிப்ரீல் ஆவார். ருகைய்யா அவர்களுக்கு வழங்கப்பட்ட ஹக் மஹறின் அடிப்படையிலும் அவருடன் நீர் நல்ல முறையில் நடந்து கொண்டதன் அடிப்படையிலும் உம்மே குல்ஸூமின் திருமணத்தை அல்லாஹ் உம்முடன் நடத்தி இருப்பதாக இவர் எனக்கு செய்தி தந்துள்ளார். (சுனன் இப்னு மாஜா.... ஹதீஸ் எண் 110)

அதாவது இரண்டாவது மகளின் திருமணத்தையும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் நடத்தும்படி அல்லாஹ் கூறியுள்ளான்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்களை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள். அப்போது அன்னார் ஹஸ்ரத் உம்மே அய்மனிடம் இவ்வாறு கூறினார்கள்: எனது மகள் உம்மே குல்ஸூமை ஆயத்தம் செய்து ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டில் விட்டுவிட்டு வருவீராக. அவருக்கு முன்னால் பறை அடியுங்கள் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அன்னாரும் அவ்வாறே செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்களிடம் வருகை தந்தார்கள். எனது அன்பிற்குரிய மகளே! நீர் உமது கணவரை எவ்வாறு காண்கின்றீர்? என்று கேட்டார்கள். அதற்கு மிகச் சிறந்த கணவர் ஆவார் என்று உம்மே குல்ஸூம் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(சீரத் அமீருல் மூமினீன் உஸ்மான் பின் அஃபான்.... பக்கம் 41 – 2006 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு வரை வாழ்ந்து வந்தார்கள். அதன் பிறகு அன்னார் நோவாய்ப்பட்டு மரணமடைந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். மேலும் அன்னாரின் கபருக்கு அருகில் அமர்ந்தார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்களின் கபருக்கு அருகில் இந்த நிலையில் அமர்ந்திருப்பதை கண்டார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்கள் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தன.

(சீரத் அமீருல் மூமினீன் உஸ்மான் பின் அஃபான்.... பக்கம் 42 – 2006 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

புகாரியின் ஓர் அறிவிப்பின் அடிப்படையில் இந்த சம்பவம் இவ்வாறு கிடைக்கின்றது. அதாவது ஹிலால் அவர்கள் ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளின் ஜனாஸாவில் பங்கு பெற்றிருந்தோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கபருக்கு அருகில் அமர்ந்திருந்தபோது அன்னாரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருப்பதை நான் கண்டேன் என்று அன்னார் கூறினார்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 1342)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்களின் மரணத்தின்போது எனக்கு மூன்றாவதாக ஒரு மகள் இருந்திருந்தால் அவரையும் நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்திருப்பேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 32 உஸ்மான் பின் அஃபான் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாஅத் தராஸுல் அரபியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓரிடத்தை கடந்து சென்றார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அங்கு அமர்ந்திருப்பதை கண்டார்கள். ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்களின் மரணத்தால் அவர்கள் மிகவும் கவலையடைந்திருந்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அன்னாரின் இரு நண்பர்களான ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உஸ்மானே! நீர் எதனால் அழுது கொண்டிருக்கின்றீர்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உங்களுடன் மருமகன் என்ற தொடர்பு முடிந்து விட்ட காரணத்தால் நான் அழுது கொண்டிருக்கின்றேன் என்று கூறினார்கள். இரண்டு மகள்களும் மரணித்திருந்தார்கள்.

அதற்கு அழ வேண்டாம். எனது உயிர் எந்த இறைவனின் கரத்தில் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! எனக்கு 100 மகள்கள் இருந்து ஒருவர் பின் ஒருவராக மரணித்து விட்டால் அவர்களில் ஒவ்வொருவரின் மரணத்திற்குப் பிறகும் மற்றவரை உமக்கு நான் திருமணம் முடித்துக் கொடுத்திருப்பேன். எந்த அளவுக்கென்றால் 100 மகள்களில் ஒருவர் கூட எஞ்சியிருக்காத வரை நான் அவ்வாறே செய்திருப்பேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 13 பக்கம் 21 ஹதீஸ் எண் 36201 உஸ்மான் பின் அஃப்ஃபான் – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இது ஓர் அன்பின் வெளிப்பாடாக இருந்தது. அந்த அன்பு இரு புறத்திலும் வெளிப்பட்டது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு ஒரு கவலை இருந்தது. அந்த உறவின் தொடர்பை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டி இருந்தார்கள். இந்த தொடர்பு நிலைபெற்றிருக்கும் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உறுதியளித்திருந்தார்கள். எஞ்சிய நற்குறிப்பு எதிர்வரும் நாட்களில் எடுத்துக் கூறப்படும்.

நான் ஒவ்வொரு ஜுமுஆவிலும் கூறி வருவதுபோன்று இன்றும் துஆக்களின் பக்கம் கவனமூட்டுகின்றேன். பாகிஸ்தான் மக்களுக்காகவும், அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்து கொண்டிருக்கவும். எதிரிகள் தம் புறமிருந்து தமது வட்டத்தில் நமக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு மேலே ஓர் இருப்பு இருக்கிறது என்பது அவர்களுக்கு தெரியவில்லை. இறைவனும் இருக்கத்தானே செய்கின்றான். அவனது நியதியும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவனது வட்டமும் அவர்களின் மீது சுருங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வட்டம் சுருங்கி விடும்போது பின்னர் அதிலிருந்து எவரும் தப்பிக்க முடியாது. அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக. இந்த மக்கள் இப்போது கூட அறிவுடன் செயல்படட்டும். நீதியை கை கொள்ளட்டும். ஆகுமற்ற அநீதிகளிலிருந்தும், தொல்லைகள் கொடுப்பதிலிருந்தும் விலகிக் கொள்ளட்டும்.

அதேபோன்று அல்ஜீரியாவின் மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்களின் ஈமான் நிலைபெற்றிருக்கட்டுமாக. அதேபோன்று வேறு சில இடங்களிலும் அஹ்மதிகளுக்கு மிகக் கடுமையான எதிர்ப்பு இருந்து வருகிறது. அல்லாஹ் எல்லா இடத்திலும் ஒவ்வொரு அஹ்மதியையும் எல்லா வகையிலும் பாதுகாப்பாக வைப்பானாக.

தொழுகைகளுக்குப் பிறகு நான் சில காயிப் ஜனாஸாக்களை நடத்துவேன். அவர்களைப் பற்றிய நற்குறிப்பையும் நான் இங்கு செய்து விடுகின்றேன். அவர்களில் முதலாமானவர், மதிப்பிற்குரிய மவ்லானா சுல்தான் மஹ்மூத் அன்வர் சாஹிப் ஆவார்கள். அன்னார் முன்னாள் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா ரப்வாவாகவும், நாஸிர் கித்மத் தர்வேஷான் ஆகவும் இருந்தார்கள். நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் ரிஷ்தா நாதா ஆகவும் இருந்துள்ளார்கள். அன்னார் ரப்வாவில் ஜனவரி 11 ஆம் தேதி சுமார் 88 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரின் தந்தை பெயர் சவுத்ரி முஹம்மத் தீன் சாஹிப் ஆகும். தாயார் பெயர் ரஹ்மத் பீபீ சாஹிபா ஆகும். அன்னாரின் தந்தையார் 1928 ஆம் ஆண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா (ரலி) அவர்களின் கரங்களில் பைஅத் செய்திருந்தார்கள். மேலும் அஹ்மதிய்யத்தில் நுழைந்திருந்தார்கள். ஹஸ்ரத் மவ்லானா சுல்தான் மஹ்மூத் அன்வர் சாஹிப் தனது தந்தைக்கு ஒரே மகனாக இருந்தார்கள். மவ்லானா சுல்தான் மஹ்மூத் அன்வர் சாஹிப் நடுநிலைப் பள்ளி வரை கல்வி கற்ற பிறகு வக்ஃப் செய்து 1946 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மதரஸா அஹ்மதிய்யா காதியானில் நுழைந்தார்கள். பாகிஸ்தான் உருவான பிறகு அஹ்மது நகர் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் அவர்கள் சென்று விட்டார்கள். அங்கு 1952 ஆம் ஆண்டு மவ்லவி ஃபாஸில் தேர்வு எழுதினார்கள்.

பின்னர் 1956 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஷாஹித் பட்டம் பெற்றார்கள். அன்னாரின் திருமணம் மஹ்மூதா ஷவ்கத் சாஹிபா பின்த் சவுத்ரி ஸஅதுத்தீன் சாஹிப் அவர்களுடன் அங்கேயே நடைபெற்றது. 1960 ஆம் ஆண்டு மவ்லானா ஜலாலுத்தீன் ஷம்ஸ் சாஹிப் அவர்கள் ஜல்ஸாவின் போது அன்னாரின் நிக்காஹ்வை நடத்தினார்கள். மர்ஹூமின் பிள்ளைகளில் நான்கு மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர். அன்னாரின் ஒரு மகன் ஹிஸான் மஹ்மூத் சாஹிப் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவார். ரப்வாவில் தஹ்ரீகே ஜதீத் அலுவலகத்தில் தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்று வருகின்றார்.

மவ்லானா சாஹிப் முதன் முதலில் குஜ்ராத்தில் பணியமர்த்தப்பட்டார்கள். பின்னர் பாகிஸ்தானின் பல்வேறு நகரங்களில் முரப்பியாக அன்னார் தொண்டாற்றியுள்ளார்கள்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நீர் சிறிது காலம் அவர்களை விட்டு விலகி விடுவீராக. மேலும் நீர் நன்கு பார்த்துக் கொண்டிருப்பீராக. நிச்சயமாக அவர்களும் (தங்கள் முடிவைக்) கண்டுகொள்வர். (37:179,180)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

1974லிருந்து 1978 வரை அன்னார் கானாவிலும் இருந்துள்ளார்கள். இந்த நாட்களில் நானும் அங்கு இருந்துள்ளேன். மிகவும் தன்னலமற்ற நபராக அங்கு அன்னார் தொண்டாற்றியதை நானும் கண்டேன். 1982 முதல் 1983 வரை செகரட்டரி மஜ்லிஸ் கார்பர்தாஸ இருந்துள்ளார்கள். பின்னர் 1983 ஆம் ஆண்டு சதர் மஜ்லிஸ் கார்பர்தாஸ் நியமனம் செய்யப்பட்டார்கள். 1983 முதல் 1998 வரை அன்னார் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யாவாக இருந்துள்ளார்கள். அதன் பிறகு 2011 வரை நாஸிர் கித்மத் தர்வேஷான் ஆக இருந்தார்கள். பிறகு 2011 முதல் 2017 வரை நாஸிர் ரிஷ்தா நாதா என்ற பொறுப்பில் இருந்தார்கள். பின்னர் நோயின் காரணமாக 2017 ஆம் ஆண்டு ஒய்வு பெற்று விட்டார்கள். அன்னாருக்கு தப்லீக் செய்யக்கூடிய ஆற்றலும், மக்களிடம் பேசுகின்ற திறமையும், சொற்பொழிவாற்றும் திறமையும் அதிகமாக இருந்தது.

பல்வேறு கொள்கை கொண்ட மக்களுடனும் ஆலிம்களுடனும் கருத்து வேறுபாடு கொண்ட விஷயங்களில் அன்னார் கலந்துரையாடியுள்ளார்கள். மிகவும் வலுவான ஆதாரங்களையும், அறிவுப்பூர்வமான பதில்களையும் அன்னார் வழங்கி வந்தார்கள். நான் கூறியதுபோன்று மிகச்சிறந்த சொற்பொழிவாளராக இருந்தார்கள். செவியேற்பவர்களை தன் பக்கம் ஈர்த்து விடுவார்கள். அன்னாருடன் பணியாற்றக்கூடிய முரப்பிமார்களும், எங்களை அன்னார் தம்முடன் அழைத்துச் செல்லக்கூடியவராக இருந்தார்கள் என்று எழுதியுள்ளனர். மேலும் எங்களுடன் எல்லையற்ற பரிவுடன் நடந்து கொண்டார்கள் என்றே ஒவ்வொருவரும் எழுதியுள்ளார்கள். தானும் தஹஜ்ஜுத் தொழுகையையும், இறைவணக்கத்தையும் நிறைவேற்றக்கூடியவராக இருந்தார்கள். பொது மக்களுக்கும், முரப்பிமார்களுக்கும் குறிப்பாக தஹஜ்ஜுத் மற்றும் இறைவணக்கம் பக்கம் அறிவுறுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள். கிலாஃபத்துடனான நன்றியுணர்வு மற்றும் கட்டுப்படுதலில் அன்னாரின் தரம் அசாதாரணமானதாக இருந்தது. நான்காவது கிலாஃபத் காலகட்டத்தில் சிறிதளவு சோதனையும் அன்னாருக்கு ஏற்பட்டது. ஆனால் முழுமையான கட்டுப்படுதலுடன் அன்னார் அந்த காலகட்டத்தை கடந்தார்கள். ஒருவருக்கு கீழிருந்து பணியாற்றினார்கள்.

இன்னும் சொல்லப்போனால், அன்னாரிடம் ஒருவர் இவ்வாறு கூறினார்: தாங்களோ நாஸிராக இருந்தீர்கள். தற்போது ஒரு நாஸிருக்கு கீழ் பணியாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள். எனக்கு பல முரப்பிமார்களும் அன்னாரின் மகளும் இந்த விஷயத்தை எழுதியுள்ளார்கள். அந்த நபரிடம் மர்ஹூம் சாஹிப் இவ்வாறு கூறினார்கள்: யாருடைய தேவை எங்கே இருக்கிறது என்பதை காலத்தின் கலீஃபா அவர்கள் நன்கு அறிந்துள்ளார்கள். நான் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளேன். என்னை குப்பை அள்ளுகின்ற பணியில் நியமித்தாலும் அந்த பணியையே நான் செய்வேன். காலத்தின் கலீஃபா எதற்கு கட்டளையிடுவாரோ அதை நான் மேற்கொள்வேன். அல்லாஹ் மீண்டும் சூழல்களை சிறந்ததாக்கினான். அன்னாரின் முழுமையான நன்றியுணர்வு மற்றும் கட்டுப்படுதலின் முன்னுதாரணத்தை அல்லாஹ் ஒப்புக் கொண்டதாக நான் கருதுகின்றேன். எனவே அல்லாஹ் சூழலை மாற்றினான். பின்னர் மீண்டும் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் உறுப்பினராகவும், நாஸிராகவும் ஆகிவிட்டார்கள். அவர்கள் கராச்சியில் இருந்தபோதிலும், ஏனைய இடங்களில் இருந்தபோதிலும் அமீருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதிலும், கட்டுப்படுவதிலும் முன்னுதாரணமாக இருந்து வந்துள்ளார்கள்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

தூதர்களுக்கு என்றென்றும் சாந்தி நிலவுவதாக.
உலகங்களுகெல்லாம் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். (37:182,183)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

அல்லாஹ் அவர்களுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பிள்ளைகளிடமும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

அன்னார் சில கல்விப் பணிகளையும் செய்துள்ளார்கள். புத்தகங்கள் எழுதியுள்ளார்கள். அன்னாரின் புத்தகங்களில் ஒன்றின் பெயர் "கலீமா தய்யிபாவின் கண்ணியத்தை நிலைநாட்டுவது அஹ்மதியின் அடையாளமாகும்". மற்றொரு புத்தகத்தின் பெயர் "அல்லாஹ் தஆலா, ஹஸ்ரத் முஹம்மது (ஸல்), திருக்குர்ஆன் மற்றும் கானா கஃபா". அடுத்து அன்னாரின் மற்றொரு புத்தகம் "அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எண்ணிக்கையின் விவகாரம்" என்பதாகும். "ஷரீஅத்தை நிலைநாட்டுவதில் தோல்விக்கான காரணிகள்". பின்னர் "நபித்துவ நிந்தனைக்கான தண்டனை" ஆகிய புத்தகங்களும் அடங்கும்.

எவ்வாறிருப்பினும் இவை அன்னாரின் புத்தகங்கள் ஆகும். நான் கூறியதுபோன்று மிகவும் வலுவான பணிகளை செய்யக்கூடியவராக அன்னார் இருந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் கருணை மற்றும் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக.

இரண்டாவது ஜனாஸா மவ்லானா முஹம்மது உமர் சாஹிப் முன்னாள் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா காதியான் அவர்களுடையதாகும். அன்னார் P.K. இப்ராஹீம் சாஹிப் அவர்களின் மகனாக இருந்தார்கள். ஜனவரி 12 ஆம் தேதி தமது 87 வது வயதில் அன்னார் வஃபாத்தானார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் கேரளாவைச் சேர்ந்தவராக இருந்தார்கள். அன்னாரின் தந்தையார் இப்ராஹீம் குட்டி சாஹிப் ஜமாஅத்தின் கடுமையான எதிரிகளைச் சார்ந்தவராக இருந்தார்கள். மவ்லானா சாஹிப் பிறப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பாக அன்னாரின் தந்தை வியாபார விஷயமாக மும்பைக்கு சென்றிருந்தார்கள். அந்த நாட்களில் மும்பையில் ஏராளமான அஹ்மதிகள் வியாபாரம் செய்து வந்தனர். மும்பையில் கேரளாவைச் சேர்ந்த சில அஹ்மதிகளை அன்னார் சந்தித்தார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கைகளைப் பற்றி கருத்துக்களை பறிமாரிக் கொண்டனர். 1924 ஆம் ஆண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மும்பைக்கு சென்றிருந்தார்கள். அந்த நேரத்தில் ஹுஸூர் அவர்களின் அருளுக்குரிய கரத்தில் அன்னார் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணையும் நற்பாக்கியம் பெற்றார்கள். அதன் பிறகு காதியானை ஸியாரத் செய்வதற்கும் அன்னாருக்கு நற்பாக்கியம் கிடைத்தது.

மவ்லானா உமர் சாஹிப் 1954 ஆண்டு காதியான் வந்தார்கள். அப்போது நாட்டின் பிரிவினைக்குப் பிறகு மதரஸா அஹ்மதிய்யா மீண்டும் அங்கு துவங்கி இருந்தது. 1955 ஆம் ஆண்டு மதரஸாவில் நுழைந்தார்கள். 1961 ஆம் ஆண்டு மதரஸா அஹ்மதிய்யா மற்றும் பஞ்சாப் யுனிவெர்ஸிட்டியிலிருந்து மவ்லவி ஃபாஸில் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற பிறகு ஓராண்டு வரை மதராஸவில் பாடம் நடத்தி வந்தார்கள். மாணவ பருவத்தின் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் பாயி அப்துர் ரஹ்மான் சாஹிப் காதியானி அவர்களின் விருப்பத்திற்கேற்ப மர்ஹூமிற்கு சுமார் ஒரு வருடம் வரை தினமும் காலையில் அன்னாரின் வீட்டில் திருக்குர்ஆன் ஓதிக்காட்டுவதற்கு நற்பாக்கியம் கிடைத்தது.

1962 ஆம் ஆண்டு தப்லீக் மைதானத்தில் தொண்டாற்ற அன்னார் தொடங்கினார்கள். இந்தியாவின் பெரும் பெரும் நகரங்களில் அன்னார் தொண்டாற்றினார்கள். மிகவும் வெற்றி பெற்ற முயல்லிக்காக தொண்டாற்றி வந்தார்கள். தப்லீக் கூட்டங்களில் அன்னாரின் சொற்பொழிவு நடைபெற்று வந்தது. யாத்கீர் முனாஸிராவில் அன்னார் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் சிறப்பான வழிகாட்டுதலுடன் கோயம்புத்தூரில் வரலாற்று முனாஸிரா நடைபெற்றது. அது தொடர்ந்து 9 நாட்கள் நடைபெற்றது. அதில்

குறிப்பாக மவ்லானா தோஸ்த் முஹம்மது சாஹிப் ஷாஹித் மற்றும் ஹாபிஸ் முஸஃபர் அஹ்மது சாஹிப் ஆகியோர் தலைமையகத்திலிருந்து பிரதிநிதிகளாக சென்றிருந்தனர். அவர்களுடன் இணைந்து மர்ஹூம் சாஹிப் மிக முக்கிய பணியாற்றினார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஓரிடத்தில் அன்னாரை பாராட்டியவாறு ஒரு குத்பாவில் இவ்வாறு கூறினார்கள்:

சில ஜமாஅத்துகள் உள்ளன. அங்கு ஒரு நபரே அனைத்து சுமைகளையும் தனியாக தானே சுமந்து கொள்கின்றார். மொழியாக்கம் செய்து அதாவது குத்பாக்களை மொழியாக்கம் செய்து உடனடியாக அதிகமாக வெளியிடுகின்றார். அதுபோன்ற ஜமாஅத்துகள் அல்லாஹ்வின் அருளால் முன்னேற்றம் அடைகின்றன. ஏனென்றால் அவர்களுக்கு காலத்தின் கலீஃபாவின் குத்பா உடனடியாக கிடைத்து விடுகின்றது. அதன் மூலம் என்ன நடக்கின்றது என்பது முழு ஜமாஅத்திற்கும் தெரிய வந்து விடுகின்றது. தென் இந்தியாவில் உருது தெரியாத நமது ஜமாஅத்துகள் உள்ளன. அங்கு நமது மவ்லவி முஹம்மது உமர் சாஹிப் முபல்லிக்காக இருக்கின்றார்கள். அவர்களுக்கு அல்லாஹ் இந்த விஷயத்தில் ஒரு பேரார்வத்தை தந்துள்ளான். இங்கு காதில் குரல் ஒலித்தவுடன் மறுபுறம் உடனடியாக அதனை மொழியாக்கம் செய்து விடுகின்றார்கள். உடனடியாக அனைத்து ஜமாஅத்துகளுக்கும் அதனை எட்ட வைத்து விடுகின்றார்கள். கடின உழைப்புடன் அன்னார் பணியாற்றி வந்துள்ளார்கள். சுமார் ஓராண்டு வரை பாலஸ்தீனிலும் அன்னாருக்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்துள்ளது. திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பல்வேறு புத்தகங்களையும் மலையாளம் மற்றும் தமிழில் மொழியாக்கம் செய்யும் நற்பாக்கியம் கிடைத்துள்ளது.

2007 ஆம் ஆண்டு நான் அன்னாரை நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யாவாக நியமனம் செய்தேன். பின்னர் அடிஷனல் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் தஃலீமுல் குர்ஆன் வக்ஃபே ஆர்ஸியாக நியமித்தேன். பின்னர் நாயிப் நாஸிர் ஆஃலா ஆகவும் அன்னாருக்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்தபோது மிகவும் அழகிய முறையில் அனைத்து தொண்டுகளையும் நிறைவேற்றியுள்ளார்கள். மதரஸா அஹ்மதிய்யாவிலிருந்து தேர்ச்சி பெற்று வெளியேறிய பிறகு ஒட்டு மொத்தமாக மர்ஹூமிற்கு 53 ஆண்டுகள் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்துள்ளது. நான்கு மகள்களை அன்னார் விட்டுச் சென்றுள்ளார்கள். மேலும் மருமகன்களும், மகள்வழி பேரனும், பேத்தியும், கொள்ளுப் பேரனும், கொள்ளுப் பேத்திகளும், உள்ளனர். ஜமாஅத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்ற பேரார்வம் அன்னாருக்கு இருந்தது. குடும்பத்துடன் தனிப்பட்ட முறையில் பயணம் மேற்கொள்ளும்போதும் ஜமாஅத்தின் பணிகளை செய்து வந்தார்கள். குறிப்பாகப மொழியாக்கம் போன்ற பணிகளில் மூழ்கி இருந்தார்கள்.

இலங்கையின் தேசிய தலைவர் எழுதுகின்றார்கள்: இலங்கை ஜமாஅத்தின் அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் ஹஸ்ரத் மூன்றாவது கிலாஃபத்தின் அருளுக்குரிய தலைமையின் கீழ் மவ்லானா சாஹிப் முதல் முறையாக தலைமையக முபல்லிக் என்ற முறையில் இலங்கைக்கு வருகை தந்த அந்த காலகட்டம் பொற்காலமாக இருந்தது. அல்லாஹ்வின் அருளால் 1978 ஆம் ஆண்டு அன்னார் வருகை தந்தார்கள். அப்போது அசாதாரணமான முறையில் ஜமாஅத்திற்குள் புதிய ஆன்மீக உணர்வுடன், சீர்திருத்தங்களும், தூய மாற்றங்களும் தென்பட தொடங்கின. மவ்லானா மர்ஹூம் சாஹிப் அவர்கள் இங்கு ஏராளமான தொண்டுகளை ஆற்றியுள்ளார்கள். 1994 ஆம் ஆண்டு கொழும்பு நகரத்தில் ராம் கிருஷ்ணாவின் பெரிய மண்டபத்தில் அமைதி மற்றும் ஒற்றுமை என்ற தலைப்பில் மவ்லானா சாஹிப் மிக அருமையான சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அதைக் கேட்பதற்கு 400 யும்விட அதிகமான மக்கள் ஒன்றுகூடி இருந்தார்கள். ராம் கிருஷ்ணா அமைப்பின் தேசிய தலைவரும், நாட்டின் ஹிந்து கல்சர் மினிஸ்டர் மதிப்பிற்குரிய தேவராஜ் அவர்களும் மவ்லானா மர்ஹூம் சாஹிப் அவர்களின் சொற்பொழிவைக் கேட்டு மிகவும் குதூகலம் கொண்டார்கள். மிகவும் பாராட்டினார்கள். ஏனென்றால் அந்த சொற்பொழிவில் மவ்லவி சாஹிப் அவர்கள் பகவத் கீதையிலிருந்து மந்திரங்களை ஓதிக்காட்டி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையை நிரூபணம் செய்து காட்டியிருந்தார்கள். எனவே இன்றும் கூட அந்த வரலாற்று சொற்பொழிவு மக்களிடையே பிரபல்யமாக உள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நான்கு புத்தகங்களை அன்னார் தமிழ் மொழியில் மொழியாக்கம் செய்துள்ளார்கள். பல்வேறு தலைப்புகளில் தமிழ் மொழியில் 7 புத்தகங்களை அன்னார் சுயமே எழுதியுள்ளார்கள். தமிழக மாநிலத்தில் சமாதான வழி என்ற ஜமாஅத் பத்திரிகை ஒன்றை தொடங்கி ஒரு நீண்ட காலம் வரை அங்கிருந்தும் ஏனைய மாநிலங்களிலிருந்தும் வெளியிட்டு வந்துள்ளார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் முழுமையான நன்றியுணர்வுடன் ஜமாஅத்துடன் தொடர்பு வைப்பதற்கு நற்பாக்கியம் வழங்குவானாக.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய ஹபீப் அஹ்மது சாஹிப் முரப்பி அவர்களுடையதாகும். அன்னார் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் ஃபேக்டரி ஏரியா ரப்வா அவர்களின் மகனான இருந்தார்கள். டிசம்பர் மாதம் 25 ஆம் தேதி இஸ்லாமாபாதில் மாரடைப்பால் 64 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

1979 ஆம் ஆண்டு ஜாமிஆவிலிருந்து தேர்ச்சி பெற்றிருந்தார்கள். அதன் பிறகு பாகிஸ்தானில் பல்வேறு மாவட்டங்களிலும் பணியாற்றும் நற்பாக்கியம் அவர்களுக்கு கிடைத்திருந்தது. 1989 முதல் 2003 வரை நைஜீரியாவில் தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்றார்கள். இதற்கிடையில் டிசம்பர் 1998 லிருந்து அக்டோபர் 2000 வரை நைஜீரியாவின் மிஷனரி இன்சார்ஜ் ஆக இருந்துள்ளார்கள். பணிவுடனும், தன்னடக்கத்துடனும் தொண்டாற்றி உள்ளார்கள். அலுவலக பணிகள் மட்டுமல்லாமல் முஹல்லாவின் தர்பிய்யத் விவகாரங்களிலும் மிகவும் அழகிய முறையில் தொண்டாற்றியுள்ளார்கள். அன்னார் ஒரு மனைவி மட்டுமல்லாமல் மூன்று மகள்களையும், இரண்டு மகன்களையும் தமக்குப் பிறகு விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் சந்ததிகளுக்கும் ஜமாஅத்துடன் நன்றியுணர்வுடன் கூடிய தொடர்பை வைப்பதற்கு நற்பாக்கியத்தை வழங்குவானாக.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய பத்ருஸ் ஸமான் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் சிறிது காலம் வகாலத் மால் யூகேவின் ஊழியராக இருந்தார்கள். ஜனவரி 3 ஆம் தேதி இறை நியதிக்கேற்ப வஃபாத்தாகி விட்டார்கள். மிகவும் கலப்பற்ற தன்மை கொண்ட மற்றும் கடுமையாக உழைக்கக்கூடிய ஊழியராக இருந்தார்கள். 1944 ஆம் ஆண்டு அமிர்தசரஸில் பிறந்தார்கள். பிறப்பால் அஹ்மதியாக இருந்தார்கள். அன்னார் அரசாங்கத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது குத்தாமுல் அஹ்மதிய்யாவின் கோயிட்டா மாவட்டத்தின் காயிதாக தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்துள்ளது. பின்னர் பலூஜிஸ்தான் அன்ஸாருல்லாஹ் அமைப்பில் நாஸிம் ஆகவும் இருந்துள்ளார்கள். 1986 ஆம் ஆண்டு அவர்கள் மீது ஜமாஅத்தின் வழக்கு ஒன்றும் தொடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அன்னார் இறை வழி கைதியாகவும் இருந்துள்ளார்கள். 1995 முதல் 99 வரை வகாலத் மால் ரப்வாவில் தொண்டாற்றியுள்ளார்கள். இங்கு லண்டன் வந்த பிறகு ரகீம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்களுக்கு அறிவுரை கூறப்பட்டால், அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. அவர்கள் எந்த ஓர் அடையாளத்தைக் காணும் போதும் (அதனை) ஏளனமாகக் கருதுகின்றனர். (37:14,15)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

அச்சகத்திலும் பின்னர் 17 ஆண்டுகள் அடிஷனல் வகாலத்தே மால் லண்டன் அலுவலகத்திலும் அன்னாருக்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்துள்ளது. அல்லாஹ் அன்னாருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய மன்ஸூர் அஹ்மது தாஸீர் அஹ்மத் அவர்களுடையதாகும். அன்னார் மதிப்பிற்குரிய மவ்லவி முஹம்மது அஹ்மது நயீம் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். ரப்வா உமூரே ஆமா துறையில் ஊழியராக இருந்தார்கள். இங்கு லண்டனிற்கு தனது மகனை சந்திக்க வருகை தந்திருந்தார்கள். டிசம்பர் 30 ஆம் தேதி 70வது வயதில் அன்னார் இறை நியதிக்கேற்ப வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

அன்னார் தனது வாழ்க்கையில் சுமார் 25 வருடங்கள் ஜமாஅத் ஊழியராக பல்வேறு அலுவலகங்களில் மார்க்கத் தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்றுள்ளார்கள். மிகவும் எளிமையாக பழகும் தன்மை கொண்டவராகவும், மார்க்கப்பற்று கொண்டவராகவும், பரிவுமிக்க நபராகவும் அன்னார் இருந்தார்கள். கிலாஃபத்துடன் மிகவும் உணர்வுப்பூர்வமாக அன்பு கொள்ளக் கூடியவராக இருந்தார்கள். மற்றவர்களுக்கும் அதற்கு அறிவுரை செய்து வந்தார்கள். பொறுமையுடனும், நிதானத்துடனும் விவகாரங்களை தீர்த்து வந்தார்கள். பொதுவாக சிக்கலான விவகாரங்கள் அனைத்தும் அன்னாரிடமே ஒப்படைக்கப்பட்டு வந்தது. சில நேரத்தில் இரு தரப்பினரும் கோபத்துடனும், உணர்ச்சிவசப்பட்டும் அலுவலகம் வருவார்கள். ஆனால் அன்னார் அன்புடனும், நேசத்துடனும் எதிர் தரப்பின் கோபத்தை தணித்து விடுவார்கள். மேலும் விவகாரத்தை தீர்த்து விடுவார்கள்.

ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு அன்னாருக்கு எந்த அளவிற்கு ஆர்வம் இருந்தது என்றால் அது குறித்து அன்னாரின் துணைவியார் இவ்வாறு எழுதுகின்றார்கள்: அன்னாரின் மகள் டாக்டர் ஆரிஃபா மன்ஸூர் சாஹிபாவின் வலீமா விருந்து நடைபெற இருந்தது. அந்த நாளன்று அதிகாலையிலேயே தயாராகி அலுவலகத்திற்கு புறப்பட்டு விட்டார்கள். இது திருமண வீடாகும். குறைந்தபட்சம் இன்றாவது விடுமுறை எடுத்துக் கொள்ளுங்களேன் என்று துணைவியார் அன்னாரிடம் கூறினார். விருந்திற்கான நேரம் 2 மணி ஆகும். நேரத்தை வீணடிக்க என்ன அவசியம் உள்ளது? நான் தற்போது அலுவலகம் சென்று கொண்டிருக்கின்றேன். குறித்த நேரத்தில் நான் வந்து விடுவேன் என்று அன்னார் பதிலளித்தார்கள்.

உயர் அதிகாரிகளுடன் மரியாதையுடனும், கண்ணியத்துடனும் நடந்து வந்தார்கள். ஏதாவதொரு விவகாரத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விட்டால் மரியாதையின் தேட்டங்களை பூர்த்தி செய்தவாறு தனது கருத்தை எப்போதும் முன் வைத்து வந்தார்கள். அன்னார் தமக்குப் பின்னால் ஒரு மனைவியையும், இரண்டு மகன்கள் மற்றும் மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

குழந்தைப் பருவம் முதலே நான் அவரை அறிவேன். என்னுடன் படித்து வந்தார்கள். நான் எப்போதும் இதனை பார்த்து வந்துள்ளேன். அதாவது அன்னாரிடம் கண்ணியம் இருந்தது. சிரித்து நகைச்சுவை செய்கின்ற இயல்பு அன்னாரிடம் இருந்தது. ஒருபோதும் கோபப்பட மாட்டார்கள். ஒருபோதும் சண்டையிட மாட்டார்கள். இதே விஷயம் தான் அன்னாரின் இறுதி வரை இருந்தது. அதன் காரணமாகவே அன்னார் மக்களிடைய சமாதானம் செய்து வைப்பதில் மிகவும் முக்கிய பங்கு ஆற்றி வந்தார்கள்.

அடுத்த ஜனாஸா தன்ஸானியாவைச் சேர்ந்த டாக்டர் உபைதீ இப்ராஹீம் மவான்கா சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் டிசம்பர் 9 ஆம் தேதி 73 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

மருத்துவ துறையில் அன்னார் உகண்டாவின் மகீரீரி பல்கலைக்கழகத்தில் அன்னார் நுழைந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் கிழக்கு ஆஃப்ரிக்காவின் உள்ளூரைச் சேர்ந்த முதல் அஹ்மதி டாக்டர் என்ற கண்ணியத்தையும் பெற்றார்கள். டாக்டர் சாஹிப் தமது இளமைப் பருவத்திலேயே பைஅத் செய்யும் நற்பாக்கியத்தை பெற்றார்கள். பள்ளி வருவத்திலேயே மார்க்க விவகாரங்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று வந்தார்கள். பெயர் தாங்கி இஸ்லாமிய அறிஞர் புறமிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது எல்லையில்லா ஆட்சேபனைகள் செய்யப்பட்டதன் காரணமாக ஜமாஅத்தை பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அன்னாரது உள்ளத்தில் தோன்றியது. அதே காலத்தில் முபல்லிக்காக இருந்த ஷேக் அபுல் அல்தாலிப் சாந்தி சாஹிப் அவர்களை அன்னார் சந்தித்தார்கள். அன்னார் அவர்களின் உறவினராகவும் இருந்தார்கள். அன்னாரிடம் ஆட்சேபனைகள் பற்றி பேசப்பட்டபோது ஷேக் சாஹிப் அவர்கள் மிக விரிவாக அந்தப் பொருளற்ற ஆட்சேபனைகளுக்கு மட்டும் பதிலளிக்கவில்லை. மாறாக அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக சவாஹிலி மொழியில் வெளியிடப்பட்ட திருக்குர்ஆனின் மொழியாக்கத்தையும், ஏனைய பல புத்தகங்களையும் அன்னார் வழங்கினார்கள். அதைப் படித்த பிறகு மர்ஹூம் சாஹிப் பைஅத்தும் செய்து விட்டார்கள். அல்லாஹ்வின் அருளால் டாக்டர் சாஹிப் தனது மரணம் வரை தனது பைஅத் உடன்படிக்கையை பேணி வந்தார்கள்.

எப்போதும் எல்லா தரப்பட்ட மக்களுக்கும் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் போதனையை எட்ட வைக்க முயன்று வந்தார்கள். அன்னாரது உள்ளத்தில் தப்லீக் செய்வதற்கு ஒரு துடிப்பு இருந்தது. அதன் காரணமாக அஹ்மதி மற்றும் அஹ்மதி அல்லாதவர்களுக்கு மத்தியில் குறிப்பாக அன்னார் அறியப்பட்டு வந்தார்கள். பெரும்பாலும் தனது பையில் ஜமாஅத் நூல்கள் மற்றும் பத்திரிகைகளை வைத்துக் கொண்டு கடை வீதிகளுக்கு செல்வார்கள். மேலும் அங்கு விநியோகித்து விடுவார்கள். அன்னாரிடம் நீங்கள் மருத்துவராக இருக்கின்றீர்கள். ஆனால் இங்கு வந்து புத்தகங்களை விற்பனை செய்து கொண்டிருக்கின்றீர்களே? என்று மக்கள் கேட்பார்கள். அதற்கு அன்னார் மிக மகிழ்ச்சியுடன் பதிலளித்து வந்தார்கள். அதாவது நான் மருத்துவமனையில் இருக்கின்றபோது உடலுக்கு சிகிச்சை அளிக்கின்றேன். ஆனால் இங்கு நான் ஆன்மாவிற்கு சிகிச்சை செய்து கொண்டிருக்கின்றேன். இரண்டு விஷயங்களையும் பிரிக்க முடியாது. மேலும் அந்த விஷயங்களிலிந்து ஒன்றை கூட புறக்கணிக்கவும் கூடாது என்று கூறுவார்கள்.

கிலாஃபத்துடன் எல்லையற்ற அன்பும், நேசத்திற்கான தொடர்பும் அன்னாருக்கு இருந்தது. பிள்ளைகளை இஸ்லாமிய வழிமுறைக்கேற்ப வளர்த்தார்கள். தஃலீம் மற்றும் தர்பிய்யத்தின் பக்கம் சிறப்பான கவனம் செலுத்தினார்கள். மேலும் வீட்டில் பிள்ளைகளுடன் ஜமாஅத்தாக தொழுவதற்கு ஏற்பாடு செய்து வந்தார்கள். ஒரு நூலகம் ஒன்றையும் அமைத்திருந்தார்கள். அதில் ஏனைய அறிவு சார் புத்தகங்களுடன் ஜமாஅத் புத்தகங்களையும் வைத்திருந்தார்கள். தனது பிள்ளைகளை அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தில் நிலைபெற்றிருப்பதற்காக தானும் துஆ செய்து வந்தார்கள். மற்றவர்களிடமும் துஆவுக்காக கேட்டுக் கொண்டார்கள். ஜமாஅத்துடன் இணைந்திருந்தார்கள்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

தூதர்களாகிய நம் அடியார்களைக் குறித்து நம் தீர்ப்பு ஏற்கனவே நிகழ்ந்து விட்டது. நிச்சயமாக அவர்களுக்கே உதவி அளிக்கப்படும். 37:172,173)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களைத் தவிர, (அவர்களுக்கு வேதனையளிக்கக்கூடிய தண்டனை அளிக்கப்படுவதில்லை). (37:41)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 25 February 2021 Issue No. 8

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அன்னாருடைய அனைத்து பிள்ளைகளும் ஜமாஅத் அமைப்புடன் இணைந்திருக்கிறார்கள். தனது தந்தையைப் போன்றே நல்லியல்பு கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அல்லாஹ் அவர்களை எப்போதும் இணைத்தே வைப்பானாக. மேலும் அவர்களின் தந்தையாரின் துஆக்களையும் நல்விருப்பங்களையும் முழுமை செய்வானாக. அல்லாஹ் டாக்டர் சாஹிப் அவர்களுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அந்தஸ்தை உயர்த்துவானாக.

அடுத்த நற்குறிப்பு தீன் முஹம்மத் சாஹிப் நங்கிலி தர்வேஷ் காதியான் அவர்களின் மனைவியான சுக்ரா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் ஜனவரி **6** ஆம் தேதி **85** வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் ஹக்கீம் முஹம்மத் ரம்ஸான் சாஹிப் (ரலி) அவர்களின் மகள் ஆவார்கள். தொழுகையையும், நோன்பையும் பேணக் கூடியவராகவும், தொடர்ந்து தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றக் கூடியவராகவும், விருந்து உபசரிப்பு செய்யக்கூடியவராகவும், பொறுமை மற்றும் நன்றியுணர்வு கொண்டவராகவும், உழைப்பாளியாகவும், அனுதாபமிக்கவராகவும் மர்ஹூமா திகழ்ந்தார்கள். மேலும் பல ஏராளமான சிறப்புகளுக்கு சொந்தக்காரராக திகழ்ந்த ஒரு பெண்மணியாக மர்ஹூமா இருந்தார்கள். கிலாஃபத்துடன் எல்லையற்ற அன்பின் தொடர்பு இருந்தது. பல ஆண்டுகள் வரை லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பின் கித்மத்தே கல்க் செயலராக மர்ஹூமா தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்றார்கள். மர்ஹூமா மூஸியாக இருந்தார்கள். இரண்டு மகன்களையும், இரண்டு மகள்களையும் மர்ஹூமா தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் ஒரு மகன் பஷீருத்தீன் சாஹிப் அவர்களுக்கு **40** ஆண்டுகள் வரை ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்துள்ளது. மற்றொரு மகனான முனீருத்தீன் சாஹிப் தற்போது காதியான் தஃமீராத் துறையில் தொண்டாற்றி வருகின்றார்கள். அல்லாஹ் மர்ஹூமா அவர்களுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரது பிள்ளைகளுக்கும் நன்மைகளின் வழி நடப்பதற்கு நற்பாக்கியம் வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு மதிப்பிற்குரிய கராமத்துல்லாஹ் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் டிசம்பர் **26** ஆம் தேதி **95** வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் சவுத்ரி ஷாஹ் தீன் சாஹிப் அவர்களின் மகன்வழி பேரன் ஆவார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சியால்கோட்டிற்கு வருகை தந்தபோது பைஅத் செய்வதற்கு அன்னார் நற்பாக்கியம் பெற்றிருந்தார்கள். மர்ஹூம் கண்ணியமிக்க இயல்பு கொண்டவராகவும், தன்னலமற்ற அன்பு கொள்ளக் கூடியவராகவும், ஏழைகளை பராமரிப்பவராகவும், தேவையுடையவர்களை கருத்தில் கொள்ளக் கூடியவராகவும் எல்லா நிலையிலும் அல்லாஹ்வுக்கு நன்றி கூறக்கூடிய கலப்பற்ற ஒரு நபராகவும் அன்னார் இருந்தார்கள்.

அன்னாரின் மகன் சுஹைல் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: விருந்து உபசரிக்கும் தன்மை அன்னாரிடம் அதிகம் இருந்தது. ஜமாஅத்தின் ஊழியர்கள், வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள், ஜமாஅத் சுற்றுப் பயணத்தில் பதீன் சிந்த் (ஊருக்கு) வருகை தரும்போது அன்னாரின் விருந்து உபசரிப்பு குறிப்பாக வெளிப்பட்டு வந்தது. ஃபுர்கான் படையிலும் தொண்டாற்றும் நற்பாக்கியம் அன்னாருக்கு கிடைத்துள்ளது. **1983** முதல் **2018** வரை அல் ஃபஸல் இண்டர்நேஷனல் அலுவலகத்தில் தன்னார்வலராக தொண்டாற்றி வந்தார்கள். ஜமாஅத் இயங்குவதற்கு ஆரம்பம் முதலே தனது வீட்டை வழங்கி வந்தார்கள். தற்போதைய வீட்டிலும் கூட வீட்டின் ஒரு பகுதி தொழுகை சென்டராக கட்டப்பட்டுள்ளது. அன்னாரது பிள்ளைகளும், மகள்களும் தொண்டாற்றி வருகின்றனர். ஒரு மகள் உள்ளார். அவரும் ஜமாஅத்திற்கு தொண்டற்றி வருகின்றார். அன்னாரின் மகள்வழி பேரன்களின் ஒரு பேரன் ஃபர்ஹாத் முரப்பி சாஹிப் இங்கு யூ.கே வில் பிரஸ் அண்ட் மீடியாவில் தொண்டாற்றி வருகின்றார். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரது பிள்ளைகளையும் அவர்களின் சந்ததிகளையும் அன்னாரது நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

அடுத்த ஜனாஸா ஜெர்மனியைச் சேர்ந்த சவுத்தி முனவ்வர் அஹ்மது காலித் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் ஆகஸ்ட் மாதம் **20** ஆம் தேதி **85** வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

ஜமாஅத் அமைப்புடன் மர்ஹூமிற்கு மிக ஆழமான தொடர்பு இருந்தது. தப்லீக் மற்றும் தர்பிய்யத் விவகாரங்களில் முழுமையாக பங்கு பெற்று வந்தார்கள். ஜெர்மனியில் பல்வேறு நேரங்களில் சதராகவும், பொதுச் செயலாளராகவும் தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்றுள்ளார்கள். அன்ஸாருல்லாஹ் அமைப்பின் பல்வேறு பொறுப்புகளில் தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்றுள்ளார்கள். அது மட்டுமல்லாமல் அன்னார் பாகிஸ்தானில் இருந்தபோது தஹ்ரீகே ஜதீத் துறையின் நிலங்களின் மேனேஜராகவும் தொண்டாற்றும் பாக்கியம் அன்னாருக்கு கிடைத்துள்ளது. கிலாஃபத்துடன் ஆழமான கலப்பற்ற தொடர்பு இருந்தது. மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். தனது நினைவாக ஒரு மனைவி மட்டுமல்லாமல் ஐந்து மகன்களையும், மூன்று மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

அடுத்த குறிப்பு பங்களாதேஷைச் சேர்ந்த அஹ்மத் ஸாதிக் சாஹிப் தாஹிர் மஹ்மூத் அவர்களின் மனைவியான நஸீரா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். நவம்பர் மாதம் **27,28** ஆகிய நாட்களின் இடைப்பட்ட இரவில் இறை நியதிக்கேற்ப மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூமா ஜமாஅத் முன்னாள் தேசிய தலைவரான மதிப்பிற்குரிய மவ்லவி முஹம்மது சாஹிப் அவர்களின் மகள் ஆவார்கள். மர்ஹூமா தொழுகை மற்றும் நோன்பை பேணக்கூடியவராகவும், விருந்து உபசரிப்பு செய்யக் கூடியவராகவும், பொறுமையாளராகவும், நன்றி செலுத்தக் கூடியவராகவும் ஒரு நல்ல பெண்மணியாகவும் இருந்தார்கள். ரமலான் மாதத்தில் தொடர்ந்து திருக்குர்ஆன் ஓதி வந்தார்கள். மேலும் திருக்குர்ஆனை ஓதி முடித்து வந்தார்கள். அதுமட்டுமல்லாமல் ஏராளமான சிறப்புகளையும் நன்மைகளையும் கொண்டவராக இருந்தார்கள் அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

*(தொடர்ச்சி 1 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad